FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075894
C

1. District : ஈ.ரோடு
மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு
காவல்நிலையம் ஈரோடு
Year: 2021
ஆண்டு
FIR No.: 10/AC/2021
மு.த.அ. எண்
Date: 12.11.2021
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended by -
Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: The PC (Amendment) Act 2018
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 11.11.2021
நாள் முதல்
Date to :
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : மதியம் முதல்
நேரம் முதல்
Time to : மாலை 6.20 மணி வரை
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.11.2021
Time
நேரம் 08.00 மணி
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் FIR VOL - IV
Time
நேரம் 09.10 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் (கணினி தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 60 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address : [illegible] வட்டாட்சியர் அலுவலகம், நம்பியூர், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M.S. [illegible]சாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் செல்லப்பகவுண்டர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 09.04.1977
(d) Nationality :
நாட்டினம் இந்தியன்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள் —
Place of Issue :
வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation :
தொழில் விவசாயம்
(g) Address : 1/39 [illegible]தோட்டம், [illegible]பாளையம்,
முகவரி [illegible] கிராமம், நம்பியூர் தாலுக்கா, - ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. அழகேசன், மண்டல துணை வட்டாட்சியர், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது!

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.S.[signature]. 12-11-2021

[signature] 12.11.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ரேகா,
Rank: பதவி காவல் ஆய்வாளர்
மா.த.க.பிரிவு, மதுரை.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 10/AC/2021 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 12.11.2021 தேதி காலை 08.00 மணிக்கு நிலைய அலுலவலில் இருந்தபோது M.S.ரத்தினசாமி, த/பெ செல்லப்பகவுண்டர், 1/39, குட்டை தோட்டம், மோடூர்பாளையம், கூடக்கரை கிராமம், நம்பியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் M.S.ரத்தினசாமி, த/பெ செல்லப்பகவுண்டர், 1/39, குட்டை தோட்டம், மோடூர்பாளையம், கூடக்கரை கிராமம், நம்பியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை, ஈரோடு. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என் அப்பா செல்லப்பகவுண்டர் அவர்களுக்கு நான் ஒரே மகன். என் அப்பாவுக்கு நம்பியூர் வட்டம், கூடக்கரை கிராமம் மோட்டூர்பாளையத்தில் சுமார் 4.30 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறோம். என் அப்பா 11.9.2000-அன்று கூடக்கரை கிராமம் பழைய க.ச.எண்.178, புதிய க.ச.எண்.146/2, 6, 147/11, 13, 16 மற்றும் 150/1, 150/2 ஆகியவற்றில் 1.48 ஏக்கர் நிலத்தை ரூ.1,47,500/-க்கு விலைக்கு வாங்கி சத்தியமங்கலம் சார்பதிவகத்தில் பத்திர எண்.1885/2000 ஆக பதிவு செய்தார். இந்த நிலத்தை நவம்பர் 2011-ல் நம்பியூர் ஸ்டேட் வங்கி கிளையில் அடமானம் வைத்து ரூ.3,00,000/- பயிர் கடன் வாங்கினோம். மேற்படி பயிர் கடனை கால நீட்டிப்பு செய்ய கடந்த செப்டம்பர் 2020-ல் நம்பியூர் ஸ்டேட் வங்கி கிளைக்கு சென்று கேட்டதற்கு, அவர்கள் ஏற்கனவே வாங்கிய கடனை அசலும் வட்டியுமாக கட்டிவிட்டு, புதிதாக லோனுக்கு அப்ளை செய்து மீண்டும் சத்தியமங்கலம் சார்பதிவகத்தில் தற்போதைய நிலமதிப்பின்படி அடமானம் செய்து கொடுத்தால் ரூ.5,00,000/- கடன் தருவதாக சொன்னார்கள். அதன்பேரில் நான் சத்தியமங்கலம் சார்பதிவகத்திற்கு சென்று மேற்படி கிரைய பத்திரம் 1865/2000-ல் உள்ள நிலத்திற்கு தற்காலிக மதிப்பு விபரம் கேட்டபோது, இந்த கிரைய பத்திரத்தில் உள்ள க.ச.150/1, 150/2-ல் உள்ள நிலத்திற்கு மதிப்பு ஜீரோ என்று உள்ளது என தெரிவித்தார்கள். எனவே, சொத்தின் மதிப்பை நிர்ணயம் செய்து கொடுக்குமாறு கேட்டு 18.11.2020-ல் என் அப்பா செல்லப்பகவுண்டர் பெயரில் சத்தியமங்கலம் சார்பதிவாளருக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தோம். அதன் பின்னர் 1.12.2020 அன்று நம்பியூரில் உள்ள திரு.K.N.வெற்றிவேல் என்ற வக்கீலிடம் சொல்லி சத்தியமங்கலம் சார்பதிவாளருக்கு ஒரு வக்கீல் நோட்டீசும் அனுப்பினோம். எந்த நடவடிக்கையும் இல்லை. அதன் பிறகு கடந்த ஏப்ரல்

2021-ல் சத்திமங்கலம் சார்பதிவாளரை சந்தித்து எங்கள் மனு பற்றி கேட்டபோது அவர்கள் நம்பியூர் வருவாய் வட்டாட்சியருக்கு ஒரு கடிதம் கொடுப்பதாகவும், அதை கொண்டுபோய் கொடுத்து கிரைய பத்திரத்தில் உள்ள க.ச.எண்.150/1, 150/2-ல் குறிப்பிட்டுள்ள நிலம் வருவாய் துறை பதிவேடுகளின்படி உண்மை தன்மை குறித்து அறிக்கை பெற்று வரும்படி சொன்னார்கள். அதன்படி நான் அந்த கடிதத்தை நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் பிறகு சில நாட்கள் கழித்து கூடக்கரை கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வந்து பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள புதிய க.ச.150/1, 150/2 ஆகியவற்றை நேரில் பார்த்து விட்டு அறிக்கை கொடுத்து விடுவதாக சொல்லிவிட்டு சென்றார். அதன்பிறகு நான் கடந்த ஜூலை 2021-ல் நம்பியூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்று பார்த்தபோது பழைய கோப்பு காணவில்லை என்றும், புதிதாக கிராம நிர்வாக அலுவலருக்கு அறிக்கை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் சொன்னார்கள் அதன்படி இரண்டு மாதங்கள் கழித்து VAO வந்து நிலத்தை பார்த்துவிட்டு சென்றார். அதன்பிறகு மீண்டும் கடந்த செப்டம்பர் 2021 மாத கடைசி வாரத்தில் மண்டல துணை வட்டாட்சியர் திரு.அழகேசன், எலத்தூர் RI, கூடக்கரை VAO ஆகியோர் எங்கள் நிலத்தை வந்து பார்வையிட்டார்கள். அப்போது மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் தாசில்தாருக்கு கடிதம் வைத்துவிடுவதாகவும் சொல்லி என்னை தனியாக அழைத்து அதிகாரிகளுக்கு கொடுக்க கொஞ்சம் செலவாகும், ஆபிசில் வந்து பாருங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். அதற்கு நானும் சரி என்று சொல்லிவிட்டு 4 நாட்கள் கழித்து நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களை அவரது அலுவலகத்தில் காலையில் சென்று பார்த்தேன். அவர் தீபாவளி கழித்து திங்கட்கிழமை 8.11.2021-ம் தேதி வரும்படி சொன்னார். அதன்படி சென்று பார்த்தபோது அன்றும் அவர் இல்லை. அதன்பிறகு 11.11.2021-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நம்பியூர் சென்று வட்டாட்சியரை அவரது அலுவலகத்தில் பார்த்தேன். அப்போது அவர் இன்று உங்கள் நிலத்தை பார்த்து விடலாம் வெளியில் காத்திருங்கள் என்று சொன்னார். அதன்பின்னர் அன்றையதினம் மதியம் சுமார் 12.00 மணியளவில் என்னை அழைத்து நீங்கள் கூடக்கரை VAO ஆபிசில் இருங்கள் நாங்கள் வருகிறோம் என்று சொன்னதால் நான் வந்து விட்டேன். சிறிது நேரத்தில் ஜீப்பில் வட்டாட்சியர், அவருடன் மண்டல துணை வட்டாட்சியர் அழகேசன், RI மற்றும் VAO ஆகியோரும் வந்தனர். நான் அவர்களை எங்கள் நிலத்திற்கு அழைத்து சென்று காண்பித்தேன். அவர்கள் அலுவலக பதிவேடுகளை வைத்து நிலத்தை பார்வையிட்டார்கள். அன்பிறகு RI, VAO, தண்டல்காரர் ஆகியோரை அனுப்பிவிட்டு தாசில்தார் ஜீப்பில் சென்று உட்கார்ந்து கொண்டார். மண்டல துணை வட்டாட்சியர் திரு.அழகேசன் என்னை தனியாக அழைத்து ரூ.50,000/- கொடுத்து விடுங்கள் எல்லா வேலைகளையும் முடித்து உங்களுக்கு நிலம் சம்மந்தமான உண்மை தன்மை அறிக்கை வாங்கி கொடுத்து விடுவதாக சொன்னார். ரூ.10,000/- ஆபீஸ் செலவுக்கும், ரூ.40,000/-

வட்டாட்சியருக்கும் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அவர் வட்டாட்சியரிடம் சென்று பேசிவிட்டு வந்து கடைசியாக ரூ.30,000/- கொடுத்துவிடுங்கள் நான் சொன்னபடி தாசில்தாரிடம் கையெழுத்து வாங்கி கொடுத்து விடுவதாக சொன்னார். அப்போது அவர் என்னுடைய செல்போன் நெம்பர் 9965716158 கேட்டு பைலில் குறித்துக்கொண்டார். அவர்கள் சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் அன்றைபதினம் மதியம் சுமார் 2.20 மணிக்கு மண்டல துணை வட்டாட்சியர் என்னை 8072512125 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண். 9965716158 -ற்கு தொடர்பு கொண்டு ஏற்கனவே கேட்ட பணம் ரெடியா என்று கேட்டபோது ரூ.15,000/- வைத்திருப்பதாக சொன்னேன். அந்தபணம் போதாது நேரில் வாங்க என்று சொன்னார். அதன்படி அன்றையதினம் மாலை சுமார் 4.00 மணியளவில் நான் நேரில் சென்று நம்பியூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த மண்டல துணை வட்டாட்சியரை பார்த்து நீங்கள் கேட்ட பணம் ரெடியாகவில்லை நான் இன்று ரூ.15,000/- கொடுத்துவிடுகிறேன் மீதி பணத்தை இரண்டு நாட்களில் கொடுத்து விடுவதாக சொன்னேன். அதற்கு அவர் ஏற்கனவே தாசில்தாரிடம் ரூ.30,000/-ம்னு சொல்லியாச்சு ரூ.5000/- வேண்டுமானால் குறைத்துக் கொள்வதாகவும் உடனே ரூ.20,000/- ரெடி பண்ணுங்கள் முதலில் அதை தாசில்தாரிடம் கொடுத்துவிடலாம் பிறகு மீதி பணத்தை கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி என்னை நம்பியூர் பரோடா வங்கி கிளை அருகே பணத்துடன் நில்லுங்கள் தான் வந்து வாங்கி கொள்கிறேன் என்று சொன்னார். சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன்பிறகு சுமார் ½ மணி நேரம் கழித்து போனில் அவரை கூப்பிட்டேன். அவர் எடுக்கவில்லை. பிறகு அவரே போனில் கூப்பிட்டு என்ன பணம் ரெடியா என்று கேட்டார். அதற்கு நான் என்னால் தற்போது ரூ.15,000/-ம் தான் முடியும் இதை வாங்கி கொண்டு எனது பைலை முடித்து கொடுங்கள் என்று கேட்டதற்கு அதெல்லாம் முடியாது ரூ.20,000/-ம் கொடுத்தால்தான் தாசில்தார் கையெழுத்து போடுவார் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதன்பிறகு, நேற்று 11.11.2021 மாலை சுமார் 6.20 மணிக்கு மண்டல துணை வட்டாட்சியர் திரு.அழகேசன் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு நாளை 12.11.2021 காலை 11.00 மணிக்குள் தான் கேட்டிருந்த பணம் ரூ.20,000/-ஐ கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள் இல்லை என்றால் உங்கள் பைல் கையெழுத்து ஆகாது என்று சொல்லிவிட்டார். அதற்கு நான் சரி என்று ஒப்புக்கொண்டேன். பிறகு நான் யோசித்து பார்த்ததில் எனக்கு எங்கள் நிலத்தின் உண்மை தன்மை அறிக்கை பெற நம்பியூர் வட்டாட்சியருக்கு கொடுப்பதற்காக, மண்டல துணை வட்டாட்சியர் திரு.அழகேசன் அவர்கள் கேட்கும் லஞ்சப் பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனவே, மண்டல துணை வட்டாட்சியர் அழகேசன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.20,000/-ஐ கொண்டு வந்துள்ளேன். என்னிடம்

லஞ்சமாக பணம் கேட்கும் நம்பியூர், மண்டல துணை வட்டாட்சியர் அழகேசன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (M.S.ரத்தினசாமி) 12-11-2021.

Sir, Received the above said computer typed complaint on 12.11.2021 at 08.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.10/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 09.10 hrs today on 12.11.2021. Sd/- (xxxxxxxx) 12.11.2021 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.M.S.Rathinasamy, S/o Sellappagounder, 1/39, Kuttai Thottam, Modurpalayam, Koodakarai Village, Nambiyur Taluk, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

Rekha 12.11.21

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.